# தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

# சென்னையில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று பிரச்சாரம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு

| நேரம் | சட்டமன்றத் தொகுதி | பேசும் இடம் |
|---|---|---|
| **21.04.2026 (செவ்வாய்க்கிழமை) - மதியம்** | | |
| மதியம் 3.00 மணி | வில்லிவாக்கம் | - கீழ்ப்பாக்கம் மனநல மருத்துவமனை |
| | ” ” | - மேடவாக்கம் டேங்க் ரோடு |
| | ” ” | - சோமசுந்தரம் 6வது தெரு |
| | ” ” | - நெட்ட முதியல்கான் தெரு (என்.எம்.கே.தெரு) |
| | வில்லிவாக்கம் | - பட்டாச்சாரி தெரு |
| | ” ” | - பரசுராம ஈஸ்வரன் கோவில் தெரு |
| | ” ” | - கொன்னூர் நெடுஞ்சாலை |
| | ” ” | - ஐ.சி.எப். சிக்னல் |
| | கொளத்தூர் | - மேயர் சிட்டிபாபு பாலம் |
| | கொளத்தூர் | - ஜம்புலிங்கம் மெயின் ரோடு |
| | கொளத்தூர் | - சிவஇளங்கோ ரோடு பெரவள்ளூர் காவல் நிலையம் |
| | கொளத்தூர் | - ஜவஹர் நகர் மெயின் ரோடு |
| | கொளத்தூர் | - சுந்தரராஜ பெருமாள் கோவில் தெரு |
| | கொளத்தூர் | - பெரவள்ளூர் சதுக்கம், (பொதுக்கூட்டம்) |



குறிப்பு : மாண்புமிகு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள் : 19.04.2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

# ‘திராவிட மாடல்’ ஆட்சியே பெண்களுக்கான ஆட்சிதான்!

## டெல்டா பரப்புரையில் - மோடிக்கு - கனிமொழி கருணாநிதி எம்.பி. பதிலடி!

**நாகை, ஏப். 21 -**

**நாகப்பட்டினம் தொகுதி தி.மு.க. கூட்டணி வேட்பாளர் ம.ம.க. தலைவர் ஜவாஹிருல்லா, திருத்துறைப்பூண்டி இந்திய கம்யூனிஸ்டு வேட்பாளர் மாரிமுத்து ஆகியோருக்காக தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற கழக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் ஏப்ரல் 19 ஆம் தேதி கடும் வெயிலில் பரப்புரை மேற்கொண்டார்.**

அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

“நாம் மக்களை சந்தித்து எங்களுடைய கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும் என்று கேட்கும்பொழுது ஒரு உரிமையோடு வந்து மக்களை சந்தித்து வாக்கு கேட்கிறோம். ஏனென்றால் மக்களுக்கு தந்திருக்கக்கூடிய வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றி தந்திருக்கிறோம் என்ற அந்த உரிமையோடு வந்து உங்களை சந்தித்து வாக்கு கேட்கிறோம்.

ஆனால் எதிரணியிலே இருக்கக்கூடியவர்கள் உங்களைப் பார்த்து ஓட்டு கேட்கும்போது என்ன சொல்லி கேப்பாங்க? ‘தமிழ்நாட்டுக்கு தொடர்ந்து துரோகம் செய்து கொண்டிருக்கிறோம். எங்களுக்கு ஓட்டு போடுங்க’ன்னா அவங்களால கேட்க முடியும்?

இன்று நம்முடைய வேட்பாளராக இங்கே நிற்கக்கூடிய பேராசிரியர் ஜவாஹிருல்லா அவர்கள் பாபநாச ம் சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றினார். அங்கே சுவாமி மலையிலே அங்கே இருக்கக்கூடிய அந்த முருகன் கோயிலுக்கு லிப்ட் வேண்டும் என்று கேட்டு அங்கே இருக்கக்கூடிய பக்தர்களுக்காக அதை பெற்று தந்தது நம்முடைய பேராசிரியர் அவர்கள்தான். இதுதான் தமிழ்நாடு. அரசியல் தாண்டி இந்த சமூகத்தின் மீது அக்கறை இருக்கக்கூடிய ஒருவரைத்தான் நம் அவருடைய வாழ்த்துக்களோடு நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் நமக்கு இங்கே வேட்பாளராக தந்திருக்கிறார்கள்.

2021ல ஆட்சி பொறுப்பேற்ற பின் 27 மாவட்டங்கள்ல 917 ஏரிகள் 1212 கோடி மதிப்பீட்டில சீரமைக்கப்பட்டிருக்கிறது. இந்த நாகப்பட்டினம் தொகுதியில மட்டும் நாகை நகர பகுதியில சுமார் 9 கோடி மதிப்பில புதிய தோழி விடுதி கட்டப்பட்டிருக்கிறது. நாகூர் பேருந்து நிலையத்துக்கு அருகிலே யாத்திரைகள் தங்கும் விடுதி கட்டப்பட்டிருக்கிறது.

நாகூர் கடற்கரையில நாகூர் ஹனீபா அவர்களின் பெயரில நெய்தல் பூங்கா அமைக்கப்பட்டது. சுமார் 18 ஆண்டுகளுக்குப் பின்னர் சிக்கல் சிங்காரவேலர் திருக்கோயில் கும்பாபிஷேகம் திமுக ஆட்சியில் தான் நடைபெற்றது. அக்கரை குளம் பகுதியில புதிய பாலம் அமைக்கப்பட்டிருக்கிறது. 12 கோடி மதிப்பில காடம்பாடி மற்றும் பப்ளிக் ஆபீஸ் ரோடு பகுதிகளில மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது.

மீனவர்களுக்கு மீன்பிடி தடைகால நிவாரணம் 8,000லிருந்து 12000 ஆக உயர்த்தி வழங்கப்படும். மீன்பிடி குறைவு கால நிவாரணம் 6000லிருந்து 9000 ஆக உயர்த்தி வழங்கப்படும். கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு மண்டலங்கள் அக்வா ஜோன் உருவாக்கப்பட்டு அதன் மூலம் மீன் உற்பத்தி அதிகரிக்கப்படும்.

மீனவ பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முக்கிய நகரங்களிலே நவீன மீன் விற்பனை அங்காடிகள் உருவாக்கித் தரப்படும். அதுமட்டுமில்லாமல் நீண்ட நாளாக இருக்கக்கூடிய மீனவ சகோதரிகளுடைய கோரிக்கை அவர்களுக்காக தனியாக அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதுவும் நம்முடைய ஆட்சி வந்தவுடன் செய்து தரப்படும்.

**மோடி நொந்து போயிருக்கிறார்!**

நாடாளுமன்றத்திலே கொண்டுவரப்பட்ட மசோதா நம்மால் தோற்கடிக்கப்பட்டதும் இன்னைக்கு எல்லாரும் புலம்ப ஆரம்பிச்சிட்டாங்க. அதுவும் பிரதமர் அவர் வந்து இந்த நாட்டுடைய பிரதமராக பேசவில்லை ஏதோ தேர்தலுக்காக பேசுவது போல பேசுகிறார். எதிர்கட்சிகளை எல்லாம் சாடி பேசக்கூடிய அளவிற்கு அவ்வளவு நொந்து போயிருக்கிறார்.

இதை தாண்டி ஒன்றிய அரசாங்கம் நேத்துல இருந்து ஒரு புது கதையை பரப்ப ஆரம்பிச்சிருக்காங்க. என்னன்னா நம்முடைய கூட்டணி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி பெண்களுக்கு எதிரானவர்கள் என்று.

இந்த கடந்த ஐந்து ஆண்டு கால ஆட்சி பெண்களுக்கான ஆட்சிதான். மகளிர் உரிமை தொகையிலிருந்து விடியல் பயணத்திலிருந்து புதுமை பெண் திட்டத்திலிருந்து எல்லாமே பெண்களுக்கு முக்கியத்துவம் தரக்கூடிய ஆட்சியாகத்தான் நம் ஆட்சி இருந்திருக்கிறது. அந்த நம்முடைய தமிழ்நாட்டில் தான் இன்னைக்கு உள்ளாட்சி தேர்தல்கள்ல 50 சதவீதம் பெண்களுக்கு இட ஒதுக்கீடு தந்திருக்கக்கூடிய மாநிலங்களில் நம் மாநிலம் தான் இருக்கு. அதைத் தாண்டி பெண்களுக்கு சொத்துல சம உரிமை என்ற நிலையை கொண்டு வந்தது தலைவர் கலைஞர் அவர்கள். நம்மை பார்த்து தொடர்ந்து காலம் காலமாக பெண்களுக்கு நாடாளுமன்றத்திலயும் சட்டமன்றத்திலயும் இட ஒதுக்கீடு 33% கொடுக்க வேண்டும் என்று போராடிய தலைவர் தலைவர் கலைஞர் அவர்கள். அவர் வழியிலே தொடர்ந்து அதற்காக குரல் எழுப்பிக் கொண்டிருக்கக்கூடிய முதல்வர் நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள்.

இங்கிருந்து டெல்லி வரைக்கும் கூட்டிட்டு போயி அங்கே நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான மகளீர் அணி திராவிட முன்னேற்ற கழகத்தில் இருக்கக்கூடிய நம்முடைய சகோதரிகளை எல்லாம் டெல்லிக்கு கூட்டிட்டு போய் மகளிருக்கான இட ஒதுக்கீடு வேண்டும் என்று போராடி இருக்கக்கூடிய இயக்கம் திராவிட முன்னேற்ற கழகம். அவர்கள் கொண்டுவந்த மசோதா உள்ளே நரி, வெளியே ஆடு.

அவர்கள் சொன்னது மகளிருக்கான மசோதா கொண்டு வருகிறோம் என்று. மகளிருக்கான மசோதா கொண்டு வரணும்னா இப்ப 543 பேர் இருக்காங்க நாடாளுமன்றத்தில அந்த அதுல 33 சதவீதம் கொடுத்தால் யாருக்கும் எந்த ஆட்சேபனையும் இல்லை. யாருக்கும் எந்த பிரச்சனையும் இல்லை .



இருக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள்ல 543ல 33% பெண்களுக்கு என்று இட ஒதுக்கீடு செய்யுங்கள், சட்டமன்றங்களிலே அதே மாதிரி இருக்கக்கூடிய எண்ணிக்கையிலேயே இட ஒதுக்கீடு செய்யுங்கள் என்பதுதான் திராவிட முன்னேற்ற கழகத்துடைய, நம்முடைய கூட்டணியில் இருக்கக்கூடிய அத்தனை இயக்கங்களும் எடுத்திருக்கக்கூடிய நிலைப்பாடு.

ஆனால் இவர்கள் கொண்டுவந்த மசோதா என்னவென்றால்... இருக்கக்கூடிய 543 தொகுதி களை 850 ஆக மாற்றி அதில் 33% கொடுப்பார்களாம்,

அந்த 850 இல் அவர்களுக்கு ஓட்டு போடக்கூடிய குஜராத், உத்தரபிரதேசம், ராஜஸ்தான், பீகார், ஹரியானா, சத்தீஸ்கர் மாநிலங்களுக்கு அதிக எம்பிக்கள் போய்விடும்.

ஆனால் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்திய தென் மாநிலங்கள், பெண்களுக்கு கல்வியை அதிகப்படுத்தி இருக்கக்கூடிய மாநிலங்களுக்கு மக்கள் தொகை குறைவால் எம்பிக்கள் குறைக்கப்படும். அவர்களுக்கு ஓட்டுப் போடாத மாநிலங்கள் வெஸ்ட் பெங்கால், தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா இதிலிருந்து ஒரு ஓட்டு கூட அவங்களுக்கு தேவைப்படாது. இந்த மாநிலங்கள் இல்லாமல் அவர்கள் என்ன வேண்டுமானாலும் மாற்றலாம்.

அவர்கள் கொண்டு வந்தது மகளிர் மசோதா இல்லை. கொண்டு வந்தது தமிழ்நாட்டுக்கு எதிரான மசோதா. இந்தியாவில் இருக்கக்கூடிய தென் மாநிலங்களுக்கு எதிரான மசோதா. ஆனா அதுக்கு ஒரு வேஷம் போட்டு கொண்டு வந்தாங்க. அந்த வேஷத்தை கலைத்த பெருமை தமிழ்நாட்டிற்கு உண்டு.

நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களுக்கு உண்டு. முதல் தோல்வி அவங்க எதிர்பார்க்கவில்லை. அதனாலதான் பிரதமர் தொடர்ந்து மகளிர் மசோதாவை தோற்கடித்துவிட்டார்கள் என்று பிரதமர் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

இங்கே இருக்கக்கூடிய எடப்பாடி பழனிசாமி இதற்கு கண்டனம் தெரிவிக்கிறார். வட மாநிலங்களில் இருக்கக்கூடிய தலைவர்கள் சொன்னால் பரவாயில்லை. ஆனால் எடப்பாடி பழனிசாமி தமிழ்நாட்டுக்கு துரோகம்செய்யக்கூடிய பழனிசாமியாக மாறி இருக்கிறார். நம்முடைய எண்ணிக்கை குறைந்தால் பரவாயில்லை என்கிறார்.

ஒன்றிய அரசாங்கம் மோடி அரசாங்கம் இப்போது ஒரு கடிதம் எழுதிஇருகிறது நம்ம முதலமைச்சருக்கு.

**விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையை நிறுத்த வேண்டுமாம்!**

நெல் விளைவிக்கக்கூடிய விவசாயிகளுக்கு நம்முடைய அரசாங்கம் ஊக்கத்தொகை கொடுப்பதை நிறுத்த வேண்டுமாம். ஏன் நிறுத்தணும்? அவங்களுக்கு அந்த நெல்லை அரிசியை பாதுகாப்பாக வைத்துக்கொள்ள முடியவில்லை. நாம் விளைவித்து அனுப்புகிற அரிசியை வைத்து கொள்வதற்கு வழியில்லை. அதனால் விவசாயிகளுக்கு கொடுக்கக்கூடிய ஊக்க தொகையை நீங்கள் நிறுத்த வேண்டும் என்று ஒரு மாநில அரசாங்கத்தை பார்த்து மோடி ஆட்சி ஒன்றிய அரசாங்கம் தெரிவிக்கிறது என்றால் இதைவிட கேவலம் என்ன இருக்க முடியும்? இதற்கு டெல்டா விவசாயிகள் இந்தத் தேர்தலில் பதில் அளிக்க வேண்டும்.

இது நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய மண். இந்த மண்ணில் அவர்களுக்கு இடமில்லை. வெற்றி என்பது நமக்கு மட்டும்தான் என்பதை அவர்களுக்கு நாம் தெளிவுபடுத்த வேண்டும்.

இந்த ஆட்சியிலே விவசாயிகளுக்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எத்தனையோ திட்டங்களை கொண்டு வந்திருக்கிறார்கள். நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் இருந்த காலத்திலே தான் ஆட்சி காலத்திலே தான் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தரப்பட்டது. அதேபோல இந்த தேர்தல் அறிக்கையிலே நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் 20 லட்சம் விவசாயிகள் பயன்படக்கூடிய வகையிலே எந்தவித மீட்டரும் இல்லாமல் மின் மோட்டர்கள் புது மின் மோட்டார்களை விவசாயிகளுக்கு வழங்குவேன் என்று அறிவித்திருக்கிறார்கள்.

அதுமட்டுமி இல்லாமல் நாம் செய்து தந்திருக்கக்கூடிய திட்டங்கள் 786 கோடியில 47,285 ஏக்கர் தரிசு நிலங்களை மறுபடியும் சாகுபடிக்கள் கொண்டு வந்திருக்கிறோம். அதில் 51லட்சம் பேர் பயனாளிகளாக மாறியிருக்கிறார்கள். 213 ஒழுங்கு முறை விற்பனை கூடங்களை நாம் சந்தை தளத்துடன் இணைத்திருக்கிறோம்.

அதன் மூலம் 6636 கோடி மதிப்பிலான விலை பொருள் வர்த்தகம் நடைபெற்றிருக்கிறது. 19 லட்சம் விவசாயிகள் அதனால் பயனடைந்திருக்கிறார்கள்.

வேளாண்மைக்கு இன்னைக்கு ஆள் இல்ல. மேலும் எல்லா வேலையும் நம்மால செய்ய முடியல. அதனால் அதற்கான இயந்திரங்களை இன்று நம்முடைய அரசாங்கம் விவசாயிகளுக்கு வாடகைக்கு தரக்கூடிய அளவிற்கான அந்த திட்டத்தை கொண்டு வந்து செயல்படுத்திக் கொண்டிருப்பது நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள்.

இப்படி தொடர்ந்து விவசாயிகளுக்கு உறுதுணையாக இருக்கக்கூடிய ஆட்சி திராவிட முன்னேற்ற கழக ஆட்சி.

நாகப்பட்டினம் வேதாரண்யம் ஆகியவற்றை இணைக்கும் புறவழிச்சாலை 23 கோடி செலவில் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த தொகுதியில் அரசு மருத்துவமனை நவீன வசதிகளுடன் புதிய கூடுதல் கட்டிடம் 9 கோடி மதிப்பீட்டில கட்டி முடிக்கப்பட்டு நம்முடைய முதலமைச்சர் அவர்களே அதை திறந்து வைத்திருக்கிறார்கள்.

திருத்துறைபூண்டி நகரப்பகுதியில் புதிய பேரூந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டு விரைவில திறக்கப்பட உள்ளது. திருத்துபூண்டி நகரம் முழுவதும் வெள்ளநீர் வடிகால் திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நம்முடைய ஆட்சி மறுபடியும் ஒரு மாதத்திலே மறுபடியும் வந்துவிடும்.

வந்தவுடன் திருவாரூர் மாவட்டத்தில வேளான் தொழில் பூங்கா அமைக்கப்படும். வேளாண்மை பொருட்களுக்கான தொழில் பூங்கா அமைக்கப்படும். 2030க்குள்ள வீடு மனையற்ற தகுதியுள்ள ஒவ்வொரு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின குடும்பத்திற்கு வீட்டுமனை பட்டா வழங்க படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

முத்துப்பேட்டை அலையாத்தி காடுகளுக்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு வசதிகள் மேம்படுத்தப்படும். அந்த வசதிகள் மேம்படுத்தப்படக்கூடியதால் இங்கே இருக்கு சுற்றி இருக்கக்கூடிய எல்லாருக்குமே வருமானமும் அதிகரிக்க அது வாய்ப்பாக அமையும்”.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் உரையாற்றினார்.



தென்காசி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கழக வெற்றி வேட்பாளர் மரு.கலை கதிரவனை ஆதரித்து ஊத்துமலை மெயின் பஜாரில் முன்னாள் எம்.பி. ஓ.பி.எஸ்.ரவீந்திரநாத் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தார். நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன் உள்பட கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் பலர் உள்ளனர். இந்நிகழ்வில் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.